பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 கார்த்திகை 10 திங்கட்கிழமை (26.11.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 360

## நாடு திரும்பினார் நவாஸ் ஷெரீப்

ராவல்பிண்டி, நவ. 26

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் சவூதி அரேபியாவிலிருந்து விசேட விமானம் மூலம் நேற்று பாகிஸ்தான் வந்தடைந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி ஏற்பட்டதன் பின்னர் நாடு கடத்தப்பட்டிருந்த நவாஸ் ஷெரீப் கடந்த செப்ரெம்பர் மாதம் 10ஆம் திகதி லண்டனிலிருந்து தாயகம் திரும்பினார். ஆனால், அவர் விமான நிலையத்தை விட்டு வெளியேற அனுமதி மறுக்கப்பட்டதுடன் அவர் திருப்பியனுப்பப்பட்டார்.

இந்நிலையில் அவர் மீண்டும் நாடு திரும்பியிருப்பது குறிப்பிடத்தக்கது.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## ஒருமணிநேர மின்வெட்டுத் தொடரும்; சிக்கனமாக பாவிக்காவிடில் மேலும் பாதிப்புறும்

### மக்களை ஒத்துழைக்கக் கோருகிறார் அரச அதிபர்

யாழ்ப்பாணம்,நவ.26

குடாநாட்டில் மின்சார விநியோகத்தைச் சீராக்குவதற்கு உகந்த நிலை இன்னும் உருவாகவில்லை. 6.5 மெகாவாட் மின் உற்பத்திக்கு முயற்சிக்கப்பட்டது. ஆயினும் 3.5 மெகாவாட் மட்டுமே கிடைக்கக் கூடியதாக இருக்கிறது. அதனால், இப்போதைய ஒரு மணிநேர மின்வெட்டு தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும்.

மக்கள் தமது மின்சாரப் பாவனையைக் குறைத்து நிலைமை மேலும் மோசமடையாமல் தவிர்ப்பதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

யாழ். அரச அதிபர் குடாநாட்டின் மின் விநியோகம் குறித்துக் கருத்துத் தெரிவித்த போது, இப்போதைய நிலையை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மின்பிறப்பாக்கிகளின் இப்போதைய உற்பத்தித்திறன் மற்றும் செயற்பாடுகள் குறித்து ஆராயப்பட்டுள்ளது. ''கூல் எயார்'' நிறுவனத்தின் உதவியுடன் மொத்தம் 6.5 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்திசெய்யமுடியுமாவென்பது குறித்தும் பரிசீலிக்கப்பட்

(08 ஆம் பக்கம் பார்க்க)

# மாவீரர் தினத்தை முன்னிட்டு நாளை நாடெங்கும் தீவிர பாதுகாப்பு ஏற்பாடு!

## தரை, கடல், வான் படைகள் உஷார் நிலையில்!!

கொழும்பு, நவ. 26

தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய நாளான மாவீரர் தினத்தை, நாளை உணர்வு பூர்வமாக அனுஷ்டிப்பதற்கு தமிழர் தாயகம் எங்கும் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கும் அதேநேரம், இலங்கை முழுவதும் தனது பாதுகாப்பு ஏற்பாடுகளை இலங்கை அரசின் பாதுகாப்புத் தரப்பு கடந்த சில தினங்களாக முழு அளவில் முடுக்கி விட்டிருக்கின்றது.

மாவீரர் தினத்தை ஒட்டி புலிகள் பெரும் தாக்குதலை நடத்தலாம் என்ற பீதியில் அரசுப் படைகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கும் இடையிலான முன்னணிக் காவலரண் பகுதிகளில் என்றுமில்லாதவாறு படையினர் உசார் நிலையில் வைக்கப் பட்டுள்ளனர். அத்தோடு எதுவும் எவ்வேளையும் நடக்கக்கூடும் என்ற எதிர்பார்ப்புக்கு மத்தியில் தரை, கடல், வான் படைகள் முன்னெச்சரிக்கையுடன் முழு வீச்சில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையின் மூலை, முடுக்கு எங்கும் உள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலைகள் எல்லாவற்றிலுமே பாதுகாப்பை அரசுப் படைகள் முழு அளவில் முடுக்கிவிட்டுள்ளன.

வீதி ரோந்துகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. வீதித் தடை நிலைகளில் சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றன.


வீதிகளில் செல்லும் வாகனங்கள் - குறிப்பாகக் கனரக வாகனங்கள் - தீவிர பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

தலைநகர் கொழும்பிலும் தெற்கின் ஏனைய முக்கிய பிரதேசங்களிலும் திடீர் சுற்றிவளைப்புகள், தேடுதல்கள் முழு அளவில் முடுக்கி விடப்பட்டிருக்கின்றன.

வான், தரை, கடல் ஆகிய மும்முனைகளிலும் புலிகளின் உத்தேச நகர்வு முயற்சிகளை முறியடிக்க முழுத் தயார் நிலையில் அரச படைகள் வைக்கப்பட்டிருக்கின்றன எனக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன

(08 ஆம் பக்கம் பார்க்க)

### பிரபா பிறந்த தினம் இன்று



தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 53ஆவது பிறந்த தினம் இன்றாகும்.

முக்கியத்துவம் வாய்ந்த வருடாந்த மாவீரர் தின உரையை தலைவர் பிரபா நாளை மாலை 5.40 மணியிலிருந்து 6.05 வரை நிகழ்த்துவார். (அ-சி)

## முழங்காவில், ஒட்டுசுட்டான் பகுதியில் கிளைமோர்த் தாக்குதல்களில் 2 பேர் பலி

கிளிநொச்சி, நவ. 26

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பிரதேசத்தில் அரசுப் படைகளின் ஆழ ஊடுருவும் அணியினரால் மேற்கொள்ளப்பட்டவை எனக் கருதப்படும் இரண்டு கிளைமோர்த் தாக்குதல்களில் இருவர் உயிரிழந்தனர்; ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்றுக்காலை 8 மணியளவில் புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் வீதியில் நடத்தப்பட்ட ஒரு தாக்குதலில் பாடசாலை மாணவன் ஒருவரும் மற்றொருவரும் கொல்லப்பட்டனர்.

இடது கரை, பேராறு, கற்சிலைமடுவைச் சேர்ந்தவரும், புதுக்குடியிருப்பு, ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலை மாண (08 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் கிபிர் குண்டு வீச்சு 4 அப்பாவிகள் பலி; 7 பேர் படுகாயம்!

### புலிகளின் செய்மதித் தொடர்பாடல் மையம் மீதே தாக்குதல் என்கின்றது படைத்தரப்பு

கிளிநொச்சி,நவ.26

இலங்கை விமானப்படையின் 'கிபிர்' குண்டு வீச்சு 'ஜெட்' விமானங்கள் கிளிநொச்சிக்கு அருகே தர்மபுரம் பகுதியில் நேற்றுக்காலை இரு தடவைகள் நடத்திய விமானக் குண்டுவீச்சில் அப்பாவிகளான - பருவப் பெண் ஒருவரும் மற்றும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த - தாய், தந்தை, மகள் என மூவருமாக மொத்தம் நான்குபேர் கொல்லப்பட்டனர்; மகன், மகனின் மனைவி ஆகியோர் உட்பட ஏழு பேர் படுகாயமடைந்தனர்.

நேற்றுக்காலை 7.15 மணிக்கும், பின்னர் 7.40 மணிக்கும் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள

(08 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளை அரசு தடை செய்தாலும் ஜே.வி.பியின். முடிவில் மாற்றமிருக்காது

### அடுத்த பட்ஜெட் வாக்கெடுப்பிலும் எதிர்க்குமாம்

கொழும்பு, நவம்பர் 26

அரசு முன்வைத்துள்ள வரவு - செலவுத் திட்டத்தை அதன் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பில் எதிர்த்து வாக்களித்த ஜே.வி.பி., தொடர்ந்தும் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பிலும் எதிர்த்து வாக்களிப்பதில் மிக உறுதியாக இருக்கின்றது என அக்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்து அரசு அறிவித்தாலும் கூட வரவு - செலவுத் திட்டத்தை எதிர்க்கும் ஜே.வி.பியின் முடிவு மாறாது எனவும் அந்த வட்டாரங்கள் உறுதியாகத் தெரிவித்தன.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## சென்னை மற்றும் ஐந்து நகரங்களில் தொடர் குண்டுத் தாக்குதல் மிரட்டல்

### மின்னஞ்சல் ஊடாக தீவிரவாதிகள் அறிவிப்பு

புதுடில்லி,நவ.26

தமிழகத் தலைநகர் சென்னை உட்பட கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த - மக்கள் அதிகம் கூடும் - ஆறு நகரங்களில் தொடர் வெடிகுண்டுத்தாக்குதல் நடத்தப்படும் எனத் தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்துள்ளனர்.

மின்னஞ்சல் ஊடாக விடுக்கப்பட்ட இந்த மிரட்டலைத் தொடர்ந்து தமிழகம் எங்கும் என்றுமில்லாதவாறு பாதுகாப்புப் பன்மடங்கு பலப்படுத்தப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

உத்தரப்பிரதேச மாநிலத்தின் முக்கிய

(08 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்மகிழ்
11 - 04 - 1946



விண்நெகிழ
28 - 10 - 2007

அமரர் **குலசிங்கம் சிவபூஷணி**

**(ஓய்வு பெற்ற குடும்பநல சேவையாளர் உருத்திரபுரம்)**

கடந்த (28.10.2007) அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவியின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், சகல வழிகளிலும் அனுதாபம் தெரிவித்தோருக்கும், உதவிகள் புரிந்தோருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதோடு நாளை (27.11.2007) செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த் தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன்அழைக்கின்றோம், இவ்வழைப்பிதழை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

47/4, செம்மணி வீதி
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## *தம்பித்துரை அன்ரனி ஜீவானந்தம்*



ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட தம்பித்துரை அன்ரனி ஜீவானந்தம் நேற்று (25.11.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் புஸ்பமலரின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற திரு. திருமதி தம்பித்துரை - எலிசபெத் தம்பதியினரின் அன்புப் புதல்வனும், திரு. திருமதி சிவகுரு - நேசபாக்கியம் தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற அருமைநாயகம், பொன்ராசா, செல்வராசா காலஞ்சென்ற தனேந்திரன், புனிதமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் புஸ்பானந்தராஜா, மங்களீனா, மடோனா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சற்குணம், தர்மகுலராஜா, சாந்தாதேவி, காலஞ்சென்ற தனபாலசிங்கம், வசந்தமலர், உதயகுமாரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஆத்மசாந்திப் பூசைப்புலி இன்று (26.11.2007) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் ஏழாலை இசிதோர் ஆலயத்தில் நடைபெற்று, அன்னாரின் நல்லடக்கம் ஏழாலை சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுன்னாகம் கிழக்கு,*
*சுன்னாகம்.* (68298)

தகவல்:
**புஸ்பமலர்**
**(சீதா - மனைவி).**

## *துரைராசா ஜெயராசா (பண்டா)*

அரியாலை, ஆனந்தன் வடலி வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஜெயராசா (23.11.2007) வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் ஆறுமுகம் துரைராசா (ஓய்வுபெற்ற புகையிரத திணைக்கள ஊழியர்) - ஜெயலட்சுமி தம்பதியினரின் அன்பு மகனும், சுகந்தினியின் பாசமிகு கணவரும், திபாகரன், தினா, குருபரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கமலராணி, சாந்தினி, காலஞ்சென்றவர்களான ராஜினி, பாஸ்கரன், சுந்தரலிங்கம், பாலேந்திரன் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல.78, மலர்மகள் வீதி, அரியாலை என்னும் முகவரியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (26.11.2007) திங்கட்கிழமை பி.ப. ஒருமணியளவில் தகனக் கிரியைகளுக்காக அரியாலை சித்துபாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

*78, மலர்மகள் வீதி,*
*அரியாலை.* (68298)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## Dr. *திருமதி குணரஞ்சிதம் குகதாஸ்*

***(யாழ். போதனா வைத்தியசாலை, முன்னாள் தோல்சிகிச்சை வைத்தியர்)***

யாழ்ப்பாணம், 123, ஐயனார் கோயில்வீதியை வதிவிடமாகவும் தற்போது கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட Dr. திருமதி குணரஞ்சிதம் குகதாஸ் அவர்கள் நேற்று (25.11.2007) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் Dr.வி.குகதாஸ் (பல்வைத்தியநிபுணர்) அவர்களின் அன்பு மனைவியும் Dr. சுதர்சன் (போதனா வைத்தியசாலை, களுபோவல, கொழும்பு), தர்சனா (மருத்துவ பீடம், கொழும்பு) ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ்சென்ற திரு.திருமதி வேலாயுத பிள்ளை (நாமகள் அச்சகம்) அவர்களின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு.திருமதி விநாயகமூர்த்தி (கணக்காளர்) அவர்களின் அன்பு மருமகளும் புனிதரஞ்சிதம், குகனேசன் (பொறியியலாளர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்), மனோரஞ்சிதம் (கொழும்பு), சந்திரவதனி, மதிவதனி (யா/வண்ணை நாவலர் ம.வி.) ஆகியோரின் அன்புச் சகோதரியும் வனிதா (கனடா), தேவதாஸ் (கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (26.11.2007) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து கனத்தை இந்துமயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*110, சம்பியன் ஒழுங்கை,*
*கொக்குவில்.* (68301)

தகவல்:
க.சந்திரபோஸ்,
சி.பகீரதன்,
கு.விஜயகுமார்
*(மைத்துனர்மார்).*

# நுகேகொடவில் 126 பேர் கைது

கொழும்பு, நவ.26

கொழும்பின் புறநகர்ப் பகுதியான நுகேகொடவில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து நடத்திய தேடுதல் வேட்டையின்போது 126 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என மிரிகான பொலிஸ் நடவடிக்கைப் பிரிவினர் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் ஏற்கனவே நீதிமன்றங்களால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 63 பேரும், போதைப் பொருள் பாவனையாளர் 53 பேரும் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தத் தவறியவர்கள் 12 பேரும் அடங்குவர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (சி)

## முகாமைத்துவக் கருத்தரங்கு

வலி தென் மேற்கு, நவ. 26

வலி தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 29, 30ஆம் திகதிகளில் அனர்த்த முகாமைத்துவ கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இப்பிரிவைச் சேர்ந்த கிராம அலுவலகர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலகர்கள் ஆகியோர் இக் கருத்தரங்கில் கலந்து கொள்ளவுள்ளனர். ஐ.ஓ.எம் நிறுவனத்தின் அனுசரணையுடன் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் இக்கருத்தரங்கை நடத்தவுள்ள தாக தெரிவிக்கப்பட்டது. (203-135)

## வலி கிழக்கு பிரதேச உதவிப்பணக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், நவ. 26

வலி-கிழக்கு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்டவர்களுக்கான பொதுசன மாதாந்த உதவிப் பணக் கொடுப்பனவு மற்றும் நோய் உதவிக் கொடுப்பனவு ஆகியன எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் வழங்கப்படவுள்ளன.

எதிர்வரும் முதலாம் திகதி முதல் 10 ஆம் திகதிவரை இக் கொடுப்பனவு தபாலகங்கள் மூலம் வழங்கப்படவுள்ளதாக வலி கிழக்குப் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் தெரிவித்தார் (1)

## தும்பளை கிழக்கில் அபிவிருத்திப் பணிகள்

பருத்தித்துறை, நவ. 26

வடக்கு கிழக்கு மாகாணக் கரையோர சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சுனாமியால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறை பிரதேச தும்பளை கிழக்கு கிராமத்தில் அபிவிருத்தி வேலைகள் சுமார் 57 இலட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சலவைத் தொழிலை மேற்கொள்வதற்கு சுமார் 8 1/2 லட்சம் ரூபா செலவில் மண்டபம் உட்பட சலவை வசதிகளை ஏற்படுத்தும்திட்டமும் இவற்றில் அடங்கும்

பலநோக்கு மண்டபம் சுமார் 24 லட்சம் ரூபா செலவிலும் மீன் சந்தை சுமார் 9 1/2 இலட்சம் ரூபா செலவிலும் சமூக செயற்பாட்டு மண்டபம் சுமார் 15 லட்சம் ரூபா செலவிலும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. (1-218)

## வலி-தென்மேற்கில் 98 வேலைத் திட்டங்கள்

வலி தென் மேற்கு, நவ. 26

வலி தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப் பிரிவில் பின் தங்கிய நிலையில் உள்ள பதினொரு கிராம அலுவலர் பிரிவுகளில் 'கம நகும' திட்டத்தின் கீழ்98வேலைத்திட்டங்கள்மேற்கொள் ளப்படவுள்ளன.

இந்த வேலைத்திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கு 13 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டிருப்பதாக பிரதேச செயலர் திருமதி. ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார்.

அந்தந்தக்கிராமமக்களின்பங்களிப்புடன் இந்த அபிவிருத்தித்திட்டங்கள்நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேற்படி கிராமங்களில் மலசல கூடங்கள்புனரமைப்பு,விவசாயிகளுக்குஉபகரணங்கள் பெற்றுக் கொடுத்தல், விதையினங்களைப்பெற்றுக்கொடுத்தல்,மின்சாரவிநியோகம்செய்தல், முன்பள்ளி களை புனரமைப்புச் செய்தல் அவற்றுக் கான தளபாடங்களைக் கொள்வனவு செய்தல், கிராம மட்டங்களில் தொழிற் பயிற்சிகளை நடத்துதல், மரம் நடுதல் போன்ற பல்வேறு திட்டங்கள் விரைவில் செயற்படுத்தப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (1-135)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் கந்தையா
**சந்திரமோகனதாஸ்**

(மீன்பிடிக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர்)



திதி: கார்த்திகை பூரணைவந்த துதியை 26.11.2007

**அப்பா இரண்டாண்டுகள்**
**ஓடி மறைந்தாலும்**
**ஆறிடுமோ எம் துயரம்**
**எம் உயிர் உள்ளவரை**
**ஆறாத எம் துயரம்**
**நீங்காத உம் நினைவுகளோடு...**

*உம் பிரிவால் வாடும்*
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

தோற்றம்
29-03-1941

மறைவு
17-11-2005

இல.4, குருசோ வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (68260)

## ஓராண்டு சங்கம நிகழ்வு

இன்பத்தின் நிறைவாய்
20 . 05 . 1976



துயரத்தின் இமயமாய்
07 . 12 . 2006

**செல்வன் சிற்றம்பலம் கிஷ்ணகுமார்**

திதி:துதியை 26.11.2007

இறுதி வரை எம்மோடு இணைந்திருப்பீர் என்றிருந்தோம்
இடைநடுவே தவிக்கவிட்டு ஏன் ஐயா மறைந்தீர்கள்?
நடமாடும் வீட்டில் படமாகிப் போன எம் கிஷ்ணாவே
உமக்கு இன்று ஓராம் ஆண்டுத்திவசம்
உன் படத்துக்கோ இன்று ஆத்மசாந்திப் பூசை
இதனைச் செய்யவா நாம் பிறந்தோம்
உம் சிரித்த முகம் காணாமல் பரிதவிக்கின்றோம்
மறு பிறப்பு என்பது மானுட உண்மையென்றால்
மறுபடியும் பிறந்திடுங்கள் எங்களுடன்
இல்லையேல் அழைத்திடுவாய் உன்னருகே.

*உங்கள் ஆத்மா சாந்திபெற கண்கள் தினம் சொரியும் கண்ணீர்ப் பூக்களால் அஞ்சலி செய்கிறோம்.*

*"சாந்தபுரி"*
No. *12, மயிலணி, சுன்னாகம்.* (68186)

அப்பா, அம்மா,
தங்கை, தம்பி.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
நாகமுத்து ரவிச்சந்திரன்

பிறப்பு
16 * 08 * 1963

இறப்பு
06 * 12 * 2006

பாசத்தின் பிறப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்
குடும்பத்தில் மெழுகுவர்த்தியாய் விளங்கி ஒளியூட்டி
வாழ்வு காட்டிய எங்கள் ஆருயிர் தெய்வமே!
நாம் பரிதவிக்கின்றோம் உமை நினைத்து
ஆறாது உன்பிரிவு மாறாது உன் பாசம்!

நாவற்காடு, வரணி. (68294) **மோகன் குடும்பம்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
18 * 05 * 1953



உதிர்வு
27 * 10 * 2007

அமரர் **நடராசா பாலசுப்பிரமணியம்** (வெள்ளை)

**அன்பின் சிகரமே! பண்பின் பிறப்பிடமே!**
**எம்மை எல்லாம் வாழ வைத்துவிட்டு**
**இடைவழியில் எம்மைவிட்டுச் சென்றதேனோ?**
*உங்கள் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.*

இன்று (26.11.2007) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*சாத்த கலட்டி*
*அளவெட்டி வடக்கு,*
*அளவெட்டி.* (68297)

குடும்பத்தினர்
சிவா, வவா (மகன்மார்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழு பிரதேச செயலர் பிரிவுகளில் 168 வீடுகள் யு.என்.டி.பி. நிறுவனம் அமைத்து வருகிறது

## வருட இறுதிக்குள் கையளிக்கப்படவுள்ளன

யாழ்ப்பாணம்,நவ.26

யு.என்.டி.பி. நிறுவனத்தினால் ஐ.ஆர்.ஆர்.பி. திட்டத்தில் 7 பிரதேச செயலர் பிரிவின் கீழ் 168 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஸ் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

மேற்படி வேலைத்திட்டத்தின் கீழ் வேலணை செட்டிபுலம் கிராமத்தில் 25 வீடுகளும், சண்டிலிப்பாய் காக்கைதீவு கிராமத்தில் 25 வீடுகளும் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கிராமத்தில் 24 வீடுகளும் தெல்லிப்பழை தேருட்டி கிராமத்திற்கு 25 வீடுகளும், சாவகச்சேரி கொறண்டிபிட்டி கிராமத்தில் 25 வீடுகளும் யாழ்ப்பாணம் முஸ்லிம் தெரு கிராமத்தில் 3 வீடுகளும் சங்கர்னை கோட்டைக்காடு கிராமத்தில் 41 வீடு களும் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த வீடுகள் இவ்வருட முடிவிற்குள் கட்டி முடிக்கப்பட்டுக் கையளிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, 50 வீதமான வேலைகளே நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் -

வேலணை, சங்கானை, சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுகளில் வேலைத் திட்டங்கள் முடிவடையாமல் மந்த நிலையில் உள்ளதாகவும் கூறப்பட்டது.

பிரதேச செயலர்கள் இதற்கான நடவடிக்கைகளை உடன் எடுத்து வேலைத் திட்டங்கள் விரைவாக இடம்பெற வழியமைக்கவேண்டும் என்று அரச அதிபர் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

(203-95)

# இலங்கை வங்கியின் ஊர்காவற்றுறைக்கிளையை மீண்டும் இயங்க வைக்குமாறு மக்கள் கோரிக்கை

நல்லூர்,நவ.26

இலங்கை வங்கியின் ஊர்காவற்றுறை கிளையை மீண்டும் ஊர்காவற்றுறை நகரப் பகுதியில் இயக்க இலங்கை வங்கி நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஊர்காவற்றுறை மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற இடப்பெயர்வு காரணமாக மீசாலைப் பகுதிக்கு மாற்றப்பட்டிருந்த இந்த வங்கி மீளத் திரும்பியபோது 1997ஆம் ஆண்டு வேலணைப் பிரதேசத்தில் தனது செயற்பாடுகளை ஆரம்பித்து இன்றுவரை தொடர்ந்து அது வேணையிலேயே இயங்கி வருகின்றது.

எனினும் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையில் நீடித்த கருமபீடம் ஐந்து நாள்கள் சேவையாக இயங்கி வருகிறது.

அதன் மூலம் பொதுமக்கள் தமது வங்கிக் கடமைகள் அனைத்தையும் நிறைவேற்ற முடியாதுள்ளது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவில் அனலைதீவு, எழுவைதீவு ஆகிய பகுதிகளும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றது. போக்குவரத்து வசதிகள் குறைவாக உள்ளதால் இங்குள்ள மக்கள் தமது வங்கி நடவடிக்கைகளுக்காக வேலணைக்குச் சென்று திரும்புவதில் பல சிரமங்களை எதிர்நோக்குவதாகக் கூறப்படுகின்றது.

கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக ஊர்காவற்றுறையில் இலங்கை வங்கிக் கிளைக்கு சொந்தக் கட்டடம் அமைக்கக் காணி ஒதுக்கப்பட்டிருந்தும் இதுவரை வங்கிக்கென புதிய கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

எனவே உரியவர்கள் இந்த விடயத்தைக் கவனத்தில் எடுத்து தங்கள் அசௌகரியங்களைப் போக்க முன்வரவேண்டும் என்று மக்கள் கேட்டுள்ளனர். (203-111)





கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாலகத்தில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவின்போது எடுக்கப்பட்ட படங்கள். நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.நந்தகுமார் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் வித்தியாலய அதிபர் இ.இராகவன், உபஅதிபர் திருமதி சுமதி மகேஸ்வரன் ஆகியோர் நிற்பதையும் அதிபர் ஆசிரியர்கள் ஊர்வலமாக அழைத்துவரப் படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:சுந்தா)

# அல்வாய் கிழக்கில் அபிவிருத்திக்கு 'கமநெகும' திட்டத்தில் 4 லட்சம் நிதி

கட்டைவேலி,நவ.26

மஹிந்த சிந்தனையின் 'கமநெகும' திட்டத்தின் கீழ் அல்வாய் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் அபிவிருத்தி வேலைக்கென 4 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இப்பிரிவிலுள்ள பின்தங்கிய மக்கள் வாழும் பகுதியிலுள்ள அல்வாய் சுப்பிரமணிய வித்தியாலயத்திற்கு சுற்றுமதில் அமைக்க 3 லட்சம் ரூபாவும் பட்டியோடை பாரதி சனசமூக நிலைய கட்டட வேலைகளைப் பூர்த்தி செய்ய ஒரு லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் தில்லையம்பலப்பிள்ளையார் கோயில் சுற்றாடலில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் 9 குடும்பங்களுக்கு மனிதவலு உதவியுடன் 9 மலசலகூடங்கள் அமைப்பதற்கும் நிதி ஒதுக்கிடப்பட்டுள்ளது.

கரவெட்டி பிரதேச செயலகத்தினூடாக இந்த அபிவிருத்தி வேலைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. (203-275)

# வடமராட்சியில் பயிற்சிப் பட்டறை

பருத்தித்துறை,நவ.26

வடமராட்சி பாடசாலைகளில் உலக உணவுத் திட்டத்தின் கீழ் கல்விக்கான உணவு பாடசாலை மட்டப் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 29, 30ஆம் திகதிகளில் நடைபெறுமென வடமராட்சி வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். நந்தகுமார் அறிவித்துள்ளார்.

வடமராட்சிப் பாடசாலைகள் இப்பயிற்சிப் பட்டறைக்கென 4 குழுக்களாக பிரிக்கப்பட்டுள்ளன. இதன் முதலாவது குழுவிற்கான பயிற்சிப் பட்டறை 29ஆம் திகதி வியாழக்கிழமை வலயக் கல்வி அலுவலக கணனி வள நிலையத்திலும் ஏனைய குழுக்களுக்கான பயிற்சிப் பட்டறை 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையிலும் நடைபெறவுள்ளன.

இப்பயிற்சிப் பட்டறையில் பாடசாலை அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர்கள் அல்லது உறுப்பினர்கள் மதிய உணவுப் பொறுப்பாசிரியர்கள், சமையலாளர் ஆகியோர் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(203-218)

# புங்குடுதீவுப் பகுதியில் இறைச்சிக்காக பசுமாடுகள் வெட்டப்படுவதாக மக்கள் விசனம்

யாழ்ப்பாணம்,நவ.26

புங்குடுதீவுப் பகுதியில் இறைச்சிக்காக பசுமாடுகள் வெட்டப்படுவது அதிகரித்துக் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இறைச்சிக்காக பசுமாடுகள் வெட்டப்பட்டு பல்வேறு இடங்களிலும் தாராளமாக விற்பனை செய்யப்படுகிறது.

வகைதொகையின்றி பசுக்கள் வெட்டப்பட்டு ஒரு கிலோ முந்நூறு ரூபா வீதம் தாரளமாக விற்பனை செய்யப்படுகிறது.

இவ்வாறு பசுக்கள் இறைச்சிக்காக வெட்டப்படுவது தொடர்பாகவும் சுகாதாரமற்ற முறையில் மாட்டு இறைச்சி விற்பனை செய்யப்படுவது தொடர்பாகவும் வீடுகளில் வைத்து மாடு அறுக்கப்படுவது தொடர்பாகவும் உரியவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் மக்கள் கேட்டுள்ளனர். (203-95)

# உதவிப்பணம் பெற்றுத் தர 42 பேர் கோரிக்கை

வலி.தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணக் கொடுப்பனவு பெற்றுத்தருமாறு கோரி புதிதாக 42 பேர் தங்கள் விண்ணப்பங்களை பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவில் சமர்ப்பித்துள்ளனர்.

இவர்களின் பெயர்ப்பட்டியல் சிபார்சு செய்யப்பட்டு வடக்கு மகாண சமூக நலன்புரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கான அங்கீகாரம், மற்றும் நிதி ஒதுக்கீடு கிடைத்ததும் இவர்களுக்கு அடுத்த ஆண்டிலிருந்து பொதுசன மாதாந்த உதவிப் பணக் கொடுப்பனவை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (203-135)

# வலி.தென்மேற்கில் கசிப்பு உற்பத்தி தீவிரம்

வலி.தென்மெற்கு பிரதேசத்தில் பல்வேறு இடங்களிலும் கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் நடைபெற்று வருவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாகப் பண்டத்தரிப்பு, மாதகல், சகாயபுரம், இளவாலை, பெரியவிளான் போன்ற இடங்களில் கசிப்பு உற்பத்தியும், விற்பனையும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இதனைத் தடுத்து நிறுத்தி உரிய சட்ட நடவடிக்கை மெற்கொள்ள பொறுப்புமிக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் தரப்பில் கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது.

கசிப்பு குடிப்பவர்களால் பெரும் சிரமங்கள் ஏற்பட்டு வருவதாகவும் இதனால் மாணவர்களும், பொதுமக்களும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகவும் கூறப்பட்டுள்ளது. (203-135)

# பண்டத்தரிப்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவோர் அதிகரிப்பு

வலி.தென்மேற்கு,நவ.26

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில் சிகிச்சைபெறவரும் நோயாளர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. வைரஸ் காய்ச்சல், சளி, இருமல் ஆகியவற்றினால் பீடிக்கப்பட்ட நோயாளர்களே தினமும் அதிகளவில் சிகிச்சை பெற வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, காய்ச்சல் நோயாளர்களுக்கு இரத்தப் பரிசோதனையும் இங்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆண், பெண் வார்டுகளிலும் பல நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டும் சிகிச்சை பெற்று வருகின்றனர். (203-135)

# பார்வை குறைந்த மாணவருக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள்

வலி.தென்மேற்கு,நவ.26

சண்டிலிப்பாய் மற்றும் சங்கானை கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த கண்பார்வை குறைந்த இருபது மாணவர்களுக்கு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் இலவசமாக மூக்குக் கண்ணாடிகளை வழங்கவுள்ளது.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் மாணவர்களிடையே கண் பரிசோதனை நடத்தி தெரிவுசெய்யப்பட்ட இருபது கண்பார்வை குறைந்த மாணவர்களுக்கு அடுத்த மாதம் முதல் வாரத்தில் இலவச மூக்குக் கண் ணாடிகள் வழங்கப்படவுள்ளதாக அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினர் தெரிவித்தனர்.

(203-135)

# யாழ்.வலய மட்டத்தில் நடைபெற்ற சதுரங்கப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,நவ.26

யாழ்.வலய மட்டத்தில் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட சதுரங்கப் போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

போட்டிகளில் குழுக்களாக வெற்றி பெற்ற பாடசாலைகளின் விவரம் மற்றும் தனிநபராக வெற்றி பெற்ற மாணவர்களின் விவரங்கள் வருமாறு:-

**தரம் 5**

**பெண்கள்** - கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை, யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை,யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.

**ஆண்கள்** - யாழ். இந்து ஆரம்ப பாடசாலை, கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை, கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்.

**19 வயதுப் பிரிவு**

**பெண்கள்** - சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, அச்சுவேலி மத்திய கல்லூரி.

**ஆண்கள்** - யாழ் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, பரியோவான் கல்லூரி.

**15 வயதுப் பிரிவு**

**பெண்கள்** - சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, இடைக்காடு மகா வித்தியாலயம்.

**ஆண்கள்** - பரியோவான் கல்லூரி, அச்சுவேலி மத்திய கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி.

**தனிநபர் போட்டி**

**தரம் 4 ஆண்கள்** - அலோசியஸ் ஐஸ்ரைன் - ஜோண் பொஸ்கோ, நேசகுமார் யுவேந்திரா - கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை, டக்லஸ் சாள்ஸ் - புனித பத்திரிசியார் கல்லூரி.

**பெண்கள்** - அபூர்வா அற்புதச்சந்திரன் - திருக்குடும்ப கன்னியர் மடம், கிருஷ்ண வேணி இரட்ணேஸ்வரன் - யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை.

**தரம் 2 - பெண்கள்** - ஆதித்தியா அருணகிரி நாதன் - யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை. (203)

டெங்குக் காய்ச்சல்

டெங்கு குருதிக் கசிவுக் காய்சசலின்போது உரிய மருத்துவ சிகிச்சை பெறப்படாதவிடத்து டெங்கு அதிர்ச்சி நிலை ஏற்படலாம். இதன்போது நோயாளியில் காய்ச்சல் சடுதியாகக் குறைந்து உடல் குளிர்ச்சியடைவதுடன் உடல் வெளிறியும் காணப்படுவார்கள். இவர்களது நாடித் துடிப்பு அதிகரிப்பதுடன் குருதியமுக்கம் வலுவாகக் குறைவடைந்து காணப்படும். இது ஆபத்தான நிலைமையாகும். இதனைத் தொடர்ந்து மரணம் சம்பவிக்கலாம்.

சுகாதாரத் திணைக்களம்

care

Disasters Emergency Committee

(சி/54392)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைதடி - நுணாவில் வீதியில் விபத்து

வீதியைக் கடக்க முயன்றவருடன் வேகமாக வந்த வாகனம் மோதுண்டது. இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை மாலை 5மணிக்கு கைதடி - நுணாவிலில் ஏ-9 வீதியில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி மகாலிங்கம் (வயது 56) என்பவர் இந்த விபத்தில் காயமுற்றார்.

அவர் கால் முறிந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்டார். வீட்டுக்கு குடிதண்ணீர் எடுத்துச் சென்ற வேளையில் இச்சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-207)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



கடந்த 06.12.2006 இல் இறைபதம் டைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் நாகமணி கணபதிப்பிள்ளை**

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவாக இன்று [26.11.2007] திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் தொடர்ந்து மதியபோசனமும் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

''ஜெகபதி இல்லம்'',
சுதுமலை வடக்கு,
மானிப்பாய். (68257)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**திருமதி கந்தையா தங்கமலர்**

மனம் மகிழ 24*12*1959

மண்நெகிழ 27*10*2007

கடந்த 27.10.2007 அன்று இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவி அவர்களின் சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (26.11.2007) திங்கட்கிழமை மு.ப.9.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் தாங்களும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

நி.மு: மாவைகலட்டி,
தெல்லிப்பழை,
த.மு: அளவெட்டி கிழக்கு,
அளவெட்டி.

குடும்பத்தினர். (68284)

## பட்டப்பகலில் திருட்டு

வலி.வடக்கு, நவ.26

பட்டப் பகல் வேளையில் வீட்டில் யன்னல் கம்பிகளை உடைத்து உட்புகுந்த திருடர்கள் சுமார் ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா பெறுமதியான நகைகளை திருடிச் சென்றுள்ளனர்.

கடந்த புதன்கிழமை அராலி மேற்கில் பாடசாலை அதிபர் ஒருவரின் வீட்டில் இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டிற்கு அருகில் உள்ள பாடசாலைக்கு வீட்டின் உரிமையாளர்களான கணவன், மனைவி ஆகிய இருவரும் சென்றிருந்த வேளையில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. இது தொடர்பாக வட்டுக் கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (203-86)

### கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2Kg இற்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் 26.11.2007 விநியோகிக்கப்படும். (68187)

* ராஜீவ்- நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

### OFFER OFFER OFFER

| | |
|---|---|
| CRT Original View Sonic 15'' | 12000/= |
| CRT 17'' | 15750/= |
| Blostar Mother borard DDR-2 | 6500/= |
| Asrock Mother borard DDR-2 | 7300/= |
| LCD Monitor | 24000/= |
| HP 1460 Printer | 6300/= |
| HP All In one | 14500/= |
| HP Office Jet (Fax, Printer, Scanner, photocopy) | 21000/= |
| Epsonlg- 300 + 2 Printer | 22000/= |
| Scanner | 7400/= |
| VGA Card | 3900/= |
| DVD R/W (Samsung) | 4800/= |
| Creative 2.1 Boofers | 4500/= |
| Creative 5.1 Boofers | 10500/= |
| Kingston 256 DDR- 2 Ram | 1950/= |
| Kingston 512 DDR- 2 Ram | 2500/= |
| Kingston1 GB DDR- 2 Ram | 4650/= |
| SD Ram | 1750/= |
| USB Mouse | 400/= |
| USB Cable | 95/= |
| Kingston 1 GB USB | 1500/= |
| Kingston 2 GB USB | 2500/= |
| Class 1 CD Cover | 25/= |
| Plastic 2 CD Cover | 15/= |

மற்றும்

Power Supply, Optical Mouse, Head Phone, T.V Card, Fax modem, CPU Colling Fan, Processor, Hard Disks, UPS, Key Board போன்றவற்றை உத்தரவாதத்துடன் நியாய விலையில் பெற்றுக் கொள்ள உடன் நாடுங்கள்:

**MUSIC WORLD**

141B, பலாலி வீதி, தபால்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி.

* Warranty உரிய பொருள்களுக்கு 1 Year முதல் 3 Year வரை Warranty வழங்கப்படும் (சி/54480)

## ஊர்காவற்றுறையில் இ.போ.ச.பஸ்நிலையம்

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவில், நகரப் பகுதியில் 'யூநொப்ஸ்' நிறுவனத்தின் உதவியுடன் இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ்நிலையத்தை அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. குறிப்பிட்ட நிறுவனத்தின் அனுமதி கிடைத்ததும் வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படும் என்று மேலும் கூறப்பட்டுள்ளது. (203-111)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**செல்லையா ரகுநாதன்**

(முன்னாள் யாழ்.மின்சாரசபை ஒய்வூதியரும் யாழ்.ஸ்ரான்லி வீதி, பிள்ளையார் ரேடர்ஸ் உரிமையாளரும்)

மலர்வு 15-04-1956 உதிர்வு 06-12-2006

திதி: 26.11.2007

அன்புடனும் பாசத்துடனும் எங்களை வளர்த்த அப்பாவே!
எங்கள் வீட்டு ஒளி விளக்கே! எங்கு சென்றீர் எம்மைவிட்டு?
இனி எங்கு காண்போம் உங்கள் திருமுகத்தை
நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவுகள் ஒரு போதும்
எம்மை விட்டு நீங்காது.
ஆயிரம் உறவுகள் வந்தாலும் அப்பா உங்களுக்கு நிகராகுமா?
உங்கள் ஆத்மா சாந்தியடையப் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

டச்சு றோட்,
சண்டிலிப்பாய். (68261)

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் பிறந்த நாள் நினைவுகூரலும்

தோற்றம் 26 . 11 . 1948



மறைவு 06 . 12 . 2006

**அமரர் ஞானேஸ்வரதேவி பரமேஸ்வரன்**

திதி : கார்த்திகை மாத அபரபக்கத் துதியை (26.11.2007)

ஞானத்தின் திருவுருவே நம்வாழ்வின் ஒளிவிளக்கே
தேனொக்கும் வாழ்வளித்த தெய்வத்திருப் பேரணங்கே
வானத்து மிசை வாழ்வில் வந்ததம்மா ஓராண்டு
ஆனைப் பொன்முகன் பாதம் அடைந்தென்றும் வாழ்ந்திடுக

எமது அன்னையின் ஆண்டுத் திவசக் கிரியைகளிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து அன்னையின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்

பரமேஸ்வரன் ரமேஷ் (கட்டடக் கலைஞர்)
கரந்தன், நீர்வேலி சுமதி செல்வேந்திரா (அவுஸ்திரேலியா)

## முதலாமாண்டு நினைவஞ்சலி

வாழ்விற்காக 13 ★ 02 ★ 1943



ஓய்விற்காக 26 ★ 11 ★ 2006

**அமரர் கணபதிப்பிள்ளை சண்முகநாதன்**

(ஓய்வு பெற்ற கிராம சேவையாளரும், சமாதான நீதிவானும், உத்தரவு பெற்ற மொழி பெயர்ப்பாளரும், பிரபல சிங்கள ஆசானும், யா/வேலாயுதம் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத் தலைவரும்)

நாடி வரும் அனைவருக்கும் யாமிருக்க பயமேன் என
உதவிக்கரம் நீட்டிய எங்கள் அப்பாவே!
புன்னகையால் ''வெல்லுவோம்'' என புதுவேதம் படைத்தவரே!
நல்லதையே நினைத்த எங்கள் குலவிளக்கே!
உங்கள் முகத்தை நாம் காணாது தவிப்பது...
இறைவன் அளித்த தண்டனையா - இல்லை
விதி என்னும் பெயரால் அரங்கேறிய சதியா ...
ஏதும் புரியவில்லை அப்பா - உம்மைப்
புரியாதோர் உனக்களித்த தண்டனையால் - உனை
புரிந்தோர் மனதுக்குள் அழுவது காதினில்தான் கேட்கவில்லையா...
ஆண்டுகள் எத்தனை சென்றாலும் ...
அழியாது தடம்பதித்த உங்கள் நல்மனதை நினைக்கையிலே
விழியோரம் அருவியாய் வழிந்தோடுதே கண்ணீர் எமையறியாது.

நினைவுத் துயரில்
(சி/54472) குடும்பத்தினர்.

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

936 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

தனுசு **10 28 39 52**

23-11-2007

செல்லுபடியாகும் தொடர் இல. 5327580 - 5342370

ஜக்பொட் பரிசு ரூபா. 3,237,400/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 320,091 | 10/- | 3,200,910/- |
| 2 இலக்கங்கள் | 29,387 | 20/- | 587,740/- |
| 1 இல. + லக்கினம் | 29,018 | 30/- | 870,540/- |
| 2 இல. + லக்கினம் | 2,673 | 100/- | 267,300/- |
| 3 இலக்கங்கள் | 792 | 500/- | 396,000/- |
| 3 இல. + லக்கினம் | 62 | 5,000/- | 310,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 3,237,400/- | 3,237,400/- |
| மொத்தம் | | | 9,169,890/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 382,032 | | 10,193,390/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-

தொடர் இலக்கம் 4453253 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2007 நொவெம்பர் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| இரத்தினபுரி | 5329147-5-66 |
| திருகோணமலை | 5327834-8-42 |
| கேகாலை | 5332468-5-15 |
| கண்டி | 5335601-5-52 |
| அம்பாறை | 5332405-7-90 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

## டுபாயில் வெற்றிடங்கள் யூ. ஏ. ஈ.- எம். பி. எம். கம்பனி

(உடனடிப் பயணம்)

| இல | தொழில் | தேவையானோர் | சம்பளம் |
|---|---|---|---|
| 01 | ஆண் சுத்திகரிப்பாளர் | 350 | டினார் 450/- |
| 02 | பெண் சுத்திகரிப்பாளர் | 400 | டினார் 500/- |

### விதிகளும் நிபந்தனைகளும்

இரண்டு வருட ஒப்பந்தம், வேலை நேரங்கள், நாளொன்றுக்கு எட்ட(8) மணித்தியாலங்கள், வாரமொன்றுக்கு 6 நாட்கள், இலவச தங்குமிடம், இலவச மருத்துவம், மற்றும் இலவச உணவு வழங்கப்படும். ஒப்பந்த காலவரை முடிவடைந்த தன் பின்னர் தகுதிகாண் காலவரை 90 நாட்கள்.

வயதெல்லை 18-45 அனுபவமுள்ளவர்கள் / பயிலுனர்கள் தமது கடவுச் சீட்டுடன் கீழ்க்காணப்படும் முகவரிக்கு வரவும்.
3 வாரங்களுக்குள் பயணம்.
நேர்முகப் பரீட்சைகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது
மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 7.00 மணிவரை
(ஞாயிற்றுக்கிழமையும்) திறந்திருக்கும்.

*உப முகவர்களும் விண்ணப்பிக்கலாம்

அராபியன் றோல் குறூப் (பிறைவேட்) லிமிடெட்
375, முதலாம் மாடி, ஆர். ஏ. டி. மெல் மாவத்தை
(டுப்பிளிக்கேஷன் ரோட்) கொழும்பு - 03.
தொலைபேசி :-2370653, 2502719
(டேர்டன் வைத்தியசாலைச் சந்தி அருகில் மஹாநாம வித்தியாலயத்துக்குப் பக்கத்தில்)

அனுமதி இல. ஏஎல்/960/விளம்பரம்/03,05/07

மேலும் தகவல்களுக்கு தங்களுக்கு அருகிலுள்ள உப முகவரைத் தொடர்புகொள்ளவும்.

[illegible]
தொலைபேசி :- 0[illegible] 2514003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகையாளர் கடத்தப்பட்ட சம்பவம்; அதிகாரிகளின் பின்னடிப்பு குறித்துக் கண்டனம்

## கொமன்வெல்த் பத்திரிகை யூனியன் ஜனாதிபதிக்குக் கடிதம்

லண்டன், நவ.26

யாழ்ப்பாணத்தில் மேலும் ஒரு பத்திரிகையாளர் கடத்தப்பட்டுள்ளார் என்ற செய்தி வந்துள்ளது. இம்மாதிரிச் சம்பவங்களில் தலையிட்டு செயற்படுவதற்கு அதிகாரிகள் பின்னடிக்கிறார்கள் என்பது குழப்பகரமாக ஒரு போக்கினை வெளிப்ப டுத்துவதாக உள்ளது. அது மட்டுமல்ல அரசுக்கு எதிரான கருத்து வெளியிடும் சுதந்திர அமைப்புக்களின் குரலை நசுக்கும் போக்கையும் இது காட்டுகிறது.

கொமன்வெல்த் பத்திரிகை யூனியன், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பியுள்ள அவசரக் கடிதம் ஒன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளது. அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சண்டேலீடர் பத்திரிகை அச்சிடும் இடம் தீயிட்டு நாசம் செய்யப்பட்டிருப்பதைத் தயவுதாட்சண்யமின்றிக் கண்டிக் கின்றோம். ஜனநாயக அமைப்பில் ஒரு பத்திரிகை அச்சிடும் இடத்தில் முகமூடி தரித்த ஆள்கள் ஊழியர்களைத் துப்பாக்கி முனையில் அச்சுறுத்துவதும் பின்னர் அச்சகத்தை தீ குண்டுகள் வீசித் தகர்ப்பதும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. இச்சம்பவத்தை மிக அவசர முன்னுரிமை கொடுத்து அரசு விசாரிக்க வேண்டும் என்று நாங்கள் வற்புறுத்துகின்றோம்.

உயர் பாதுகாப்பு வலயத்தில் ஆயுதம் தரித்த இராணுவத்தினரால் பாதுகாக்கப்படும் பகுதியில் இம்மாதிரி ஒரு சம்பவம் இடம்பெறுமானால், கொழும்பிலிருந்து வெளியாகும் எல்லா சுதந்திரப் பத்திரி கைகளதும் எதிர்காலப் பாதுகாப்பு பாரதூரமான கேள்விக்குரியதாகியுள்ளது.

இலங்கையில் பத்திரிகை சுதந்திரம் தொடர்பான நிலைமைகள் சமீபமாக மோசமடைந்துவருவது குறித்து கொமன் வெல்த் பத்திரிகை யூனியன் பெரிதும் கவலையடைந்துள்ளது. 'லீடர்' நிறுவனம் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு முன்னதாகத் தமிழ் பத்திரிகைகளின் இக்கட்டுகள் பற்றி நாம் எமது கவலையை வெளியிட்டிருந்தோம். பத்திரிகையாளர்கள் கொலை செய்யப்பட்ட விவகாரம் இன்னமும் தீர்த்துவைக்கப்படாமலிருக்கின்றது. உயிர் அச்சுறுத்தல் காரணமாக உலகப் புகழ்பெற்ற பத்திரிகையாளர் இக்பால் அத்தாஸ் நாட்டை விட்டே போக வேண்டியேற்பட்டது. இலங்கை அரசு பாரதூரமான பயங்கரவாதப் பிரச்சினையை எதிர்நோக்கி வருவதை நாம் அறிவோம். ஆனால் தனிப்பட்டவர்களின் கருத்து சுதந்திரத்தையும், தேசியப் பிரச்சினைகளை மக்களுக்கு அறிவிக்கும் உரிமையையும் நசுக்குவதற்கு இது ஒரு காரணமாக இருக்கமுடியாது.

ஜனநாயகத்தில் சுதந்திரப் பத்திரிகைத் துறை இயங்கவேண்டும் என்பது உலக மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. இலங்கை அரசாங்கம் பத்திரிகை சுதந்திரத்தை உண்மையாகவே ஆதரிக்கிறதென்றால் பத்திரிகைகள் சுதந்திரமாகச் செயற்படவும் அதன் ஊழியர்கள் பயமோ அச்சமோ அற்ற சூழலில் தொழில் புரியவும் அவரசமாகச் செயற்பட்டு உறுதிசெய்ய வேண்டும்.

இவ்வாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# விவசாயிகளின் ஓய்வூதியத்தை மூவாயிரமாக உயர்த்த ஏற்பாடு

கொழும்பு, நவ.26

தற்போது மாதாந்தம் விவசாயிகளுக்கு ஓய்வூதியமாக வழங்கப்பட்டுவரும் ஆயிரம் ரூபாவை மூவாயிரம் ரூபாவுக்கும் அதிகமாக வழங்க அரசு திட்டமிட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றில் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற விவசாயிகள் ஓய்வூதியம் தொடர் பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை யில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.அவர் மேலும் கூறியவை வருமாறு:-

கமத்தொழில் வளர்ச்சிக்கு நாம் பல திட்டங்களை முன்னெடுத்து வருகிறோம். விவசாயிகளின் ஓய்வூதியம் அதிகரிக்கப்படல் வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக் கிடையாது. விவசாய அபிவிருத்திக்கு 10 கோடி ரூபா பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பல திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

இது தவிர, விவசாயிகள் ஓய்வூதிய நிதியைப் பலப்படுத்த நாம் நடவடிக்கை எடுக்கவுள்ளோம். 40 வயதுக்கு மேற்பட்ட விவசாய ஓய்வூதியம்பெறுவோரின் ஊழியத் தொகையை அதிகரிக்க நாம் திட்டமிட்டுள்ளோம்.

தற்போதிருக்கும் விவசாயிகளின் ஓய்வூதிய நிதியைப் பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுத்துவருகின்றோம். ஆயிரம் ரூபாவாகவுள்ள விவசாயிகளின் ஓய்வூதியத் தொகையை மூவாயிரம் ரூபாவாக உயர்த்த வேண்டும் என்று ஐ.தே. கட்சி கேட்கின்றது. உண்மையில் அதைவிட வும் அதிகமாக வழங்கவே விரும்புகின்றோம்.

தற்போது மாதாந்தம் 54 ஆயிரம் விவசாயிகள் 6 கோடி ரூபாவை ஓய்வூதியமாகப் பெறுகின்றனர்.

இதை அதிகரிக்க நாம் நடவடிக்கை எடுப்போம். - என்றார். (சி)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், நவ.26

வண்ணார்பண்ணை ஐயனார் ஆலயத்தில் கடந்த 17 ஆம் திகதி தொடக்கம் தினமும் பிற்பகல் 2 மணிக்குப் படிப் பூஜையும் பஜனையும் இடம்பெற்று வருகின்றன. மகரஜோதி தினத்தன்று விசேட அபிசேகமும் அன்னதானமும் இடம்பெறவுள்ளன. (203)

* * *

நல்லூர் பண்டாரவளவு ஆதி நரசிம்ம வைரவர் கோயில் எழுந்தருளி மண்டபத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த புதன் கிழமை நடைபெற்றது.

யாழ்.மாநகராட்சி மன்றத்தின் இந்த ஆலயத்தின் புதிய எழுந்தருளி மண்டபத்திற்கான அடிக்கல்லை மாநகராட்சி மன்ற ஆணையாளர் மு.செ.சரவணபவ நாட்டி வைத்தார். (203-111)

## தையற்பயிற்சி பெற்றோருக்கு டிசெம்பரில் பரீட்சைகள்

நல்லூர்,நவ.26

குடாநாட்டில் உள்ள தொழில் திறன் அபிவிருத்திக்கான தையற் பயிற்சி நிலையங்கள் மற்றும் மாவட்ட மட்டத்திலான டிப்ளோமா சான்றிதழுக்கான பயிற்சி நிலையம் ஆகியவற்றில் ஒருவருட தையற் பயிற்சியை நிறைவுசெய்த பயிற்சியாளர்களுக்கான பரீட்சைகள் அடுத்த மாதம் நடைபெறவுள்ளன என்று கிராம அபிவிருத்தி திணைக்கள மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ரி.தியாகமூர்த்தி தெரிவித்துள்ளார். (203-111)



கலட்டி எச்சாட்டி மஹா மாரி அம்மன் மணிமண்டபத்துக்கான அடிக்கல்லை முன்னாள் மாநகர சபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா நட்டுவைத்த போது எடுக்கப்பட்ட படம்.

## ஈரவிழிகளுடன் 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 22 ★ 11 ★ 1932 மறைவு 26 ★ 11 ★ 2003

அமரர்
### தம்பிஐயா பொன்னம்பலம்
திதி (திருதியை)

குடும்பத்தின் குல விளக்காய் வாழ்ந்து
எம்மை அன்புடன் அரவணைத்து
நன்னெறிகாட்டி வாழ வைத்த
எங்கள் அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்ம சாந்திக்காக
என்றும் இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

14,கருவேலடி லேன்,
கொக்குவில் கிழக்கு. (சி/54481)

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## புங்குடுதீவில் இலவச மருத்துவமுகாம்

யாழ்ப்பாணம்,நவ.26

தீவக லயன்ஸ் கழகம் அப்பகுதி மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் அண்மையில் இலவச மருத்துவ முகாம் ஒன்றை நடத்தியது.

இதில் கலந்து கொண்ட கர்ப்பிணித் தாய்மார், முதியோர், குழந்தைகள் ஆகியோருக்கு மருத்துகள், சத்துணவுகள் என்பன வழங்கப்பட்டன. நீரிழிவு நோயாளர்களுக்கு அவர்களுக்குரிய பால்மா வகைகளும் வழங்கப்பட்டன.

யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள், தாதியர் மற்றும் மருத்துவ பீட மாணவர்கள் இதில் பங்குபற்றிச் சிகிச்சைகளை மேற்கொண்டனர்.

இதற்கான நிதி உதவியை யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள சிவா நறுமணப் பூங்கா நிறுவனத்தினர் வழங்கியிருந்தனர். (203)


## இறைச்சிக்கோழி

3 கிலோவிற்கு மேற்பட்ட புறொயிலர், கல்போ, சேவல் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. (சுத்தம் செய்தல் இலவசம்)

1)NEW R.S.K.பாம் மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில்.

2)NEW R.S.K. பாம் கே.கே.எஸ்.வீதி, குப்பிழான் (கோமர் சந்தி வங்கி அருகில்) (68292)


## முதலாம் ஆண்டு நினைவலைகள்



### அமரர் நாகமுத்து ரவிச்சந்திரன்
(யா/எழுதுமட்டுவாழ் அ.த.க.பாடசாலை)

வையத்தின் மைந்தனாக 16 08 1963

தெய்வத்தின் சொந்தமாக 06 12 2006

திதி: பிரதமை 26.11.2007 அபரபக்க துதியை

கண்ணீரிற் கரைகின்றோம் தெய்வமே!
கண்மூடிப் பயணித்தீர் - என்றும்
எம் உடலில் உயிர் வாழும் வரைக்கும்
எம்முள் இறையாகி என்றும் வாழ்வீர்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நாவற்காடு,
வரணி. (68295)

அன்பான மனைவி
திலகவதி ரவிச்சந்திரன்,
குடும்பத்தினர்.

## நினைவலைகளில் 31 ஆம் நாளும் நன்றி நவிலலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

இறைவன் வாசலில்
16★11★1947

இறைவன் பாதத்தில்
27★10★2007



### திருமதி இரதிதேவி சிவசம்பு

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
அன்பிற்கும் பாசத்திற்கும் உறைவிடமாய்
வளர்ச்சிக்கும் முயற்சிக்கும் வழிகாட்டியாய் வாழ்ந்து
ஒளிச்சுடராய் திகழ்ந்த எங்கள் குல விளக்கின்

உயிர் பிரிந்த செய்தி கேட்டு ஓடோடி வந்து ஆறுதல் அளித்தவர்களுக்கும், அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகள், எங்களின் இல்லத்திற்கு நேரில் வந்தும், தபால், தந்தி, தொலைபேசி மூலமும் எமது துயரத்தில் பங்குகொண்டவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் பேருதவி புரிந்தவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் யாவர்க்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன் இன்று (26.11.2007) திங்கட்கிழமை நடைபெறும் சபிண்டீகரண ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும், அத்துடன் இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். "இரதிவாசம்"
மீசாலை கிழக்கு, மீசாலை. (சி/54479)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நல்வாழ்த்துக்கள்



எமது அன்பிற்கினிய குடும்ப நண்பர்

### திரு. கு. வாகீசன் அவர்கள்

(முன்னாள் பிரதி அதிபர்
புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி)
நீர்வேலி, கரந்தன்

**இராமுப்பிள்ளை வித்தியாலயத்தின்**

அதிபராக நியமனம் பெற்றமையையிட்டு எமது நல்வாழ்த்துக்களை நவில்வதுடன் அவர் மேலும் பல பதவியுயர்வுகள் பெற்றுச் சிறக்கவும் எமது அன்பான வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கரந்தன்,
நீர்வேலி.

பரமேஸ்வரன் ரமேஷ் (கட்டடக் கலைஞர்) சுமதி செல்வேந்திரா (அவுஸ்திரேலியா)

## கோழிக்குஞ்சு விநியோகம்

PIRIMA சிவப்பு, வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் 29.11.2007 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். (68188)

* றாஜீவ்- நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

## பயன்தரும் மரக்கன்றுகள் கிராமமட்டத்தில் விநியோகம்

யாழ்ப்பாணம், நவ.26

கிராமமக்களிடையே வீட்டுத்தோட்டச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்குடன் கோப்பாய், யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய், நல்லூர், கரவெட்டி, சாவகச்சேரி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் கிராமமட்ட அமைப்புகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு 'சொண்ட்' நிறுவனத்தால் பயன்தரு மரக்கன்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தேசி, தோடை, கமுகு, பலா, கொய்யா போன்ற மரக்கன்றுகளும் வெண்டி, பயிற்றை, மிளகாய், புடோல், கீரை போன்ற விதையினங்களும் வழங்கப்பட்டு வருகின்றன. (203)

## கண்ணீர் அஞ்சலி

### வேலுப்பிள்ளை சபாபதிப்பிள்ளை

(தொழில்நுட்ப உத்தியோகத்தர்)



உதவிகள் என்றால் நீ
முந்திக் கரம் தருவாய்
உறவினைக் காத்து நீ
மனங்களில் உயர்ந்து நின்றாய்
ஊர் என்றால் என்றும் நீ
உயர்த்திட சேவை செய்தாய்
உற்ற நட்புக்கு நீ
இலக்கணமாய் திகழ்ந்தாய்
ஊருறவு நட்பெல்லாம் ஒன்றாய்க் கூடி
ஓலமிட்டலற நீயும் எங்கே சென்றாய்?
உன்னான்மா நித்தியத்தில் அமைதி பெற
இறைஞ்சுகின்றோம் இறைவனையே.
*சாந்தி! சாந்தி! சாந்தி!*

அச்சுவேலி. (68266)


திரு.வே.பாலசுப்பிரமணியம்
குடும்பத்தினர்.

## மூன்றாமாண்டு நினைவு நிலா

### அமரர் தில்லையம்பலம் சிவசாமி

(கவிஞர் தில்லைச்சிவன்)

உதயம் 05-01-1928 நிலவு 26-11-2004



அருகிருந்தெமை அணைத்து
ஆலமர விழுதெறிந்து
ஆதவனாய் ஒளி ஏற்றி
அகிலத்தை அறிய வைத்தீர்
தீபங்கள் ஒளிரும் கார்த்திகை
முழு நிலவில்
தில்லை மேடைச் சிவனடி
சேர்ந்தின்று
மூன்றாண்டு சென்றிடினும்
மூச்சினிலும் இதயத்துடிப்பினிலும்
உம் உறவின் ஸ்பரிசம்
வருடுவதால் வாழ்கின்றோம்!
பிள்ளைப் பிறை நிலவுகள் நாம்
முழுமதியின் முகம்
கண்டாறுகின்றோம்!

*45/1, அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.* (68282)


மனைவி,
பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 9 ஆம் ஆண்டு நினைவுத் துளிகள்

### திருமதி இராணி ஜெகஜோதி

(ஆசிரியை, தி/சென்.ஜோசப் கல்லூரி, திருகோணமலை)
*திதி:துதியை*

மலர்வு 31.01.1949 உலர்வு 05.12.1998



ஒன்பதாண்டுகள் ஓடி மறைந்தாலும்
ஒரு கணமும் எம்மோடு நீங்காத எம் செல்வமே!
நீ வாழ்ந்த நாள் உன்னோடு வாழ்ந்த காலம்
நிழலாய் நின்று வாட்டுதம்மா
நீ நாட்டிய புகழோடு சாதனை நித்தம் நின்னை
நினைவு கூரும்
நின் நினைவுகளைச் சுமந்து கொண்டு
நீ சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

*198, சென்.பெனடிக் றோட்,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.* (68288)

குடும்பத்தினர்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



எம் இல்லத்தின் ஒளிவிளக்கே,
நீங்கள் எம்மை விட்டுப்
பிரிந்து மூன்று ஆண்டுகள்
ஆனதோ, மூவாண்டு சென்றாலும்
எம் மூச்சை விட்டிறங்காத
பேரன்பே, அன்போடு
எமைக்காத்த தெய்வமே!
உங்கள் திருமுகத்தை நிஜத்தில்
நாளாந்தம் காணுகின்றோம்
நீங்கள் என்றென்றும்
எங்களுடன் வாழ்கின்றீர்கள்,
வையத்தில்
எமக்கு அறிவுகள் பலவூட்டி
பட்டங்கள் பல பெற வழி
காட்டிய அன்னையே ஆயிரம்
உறவுகள் வந்தாலும்
அம்மா உங்களுக்கு நிகராகுமா?
*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

(68133)

மண்ணில் 17.07.1942

விண்ணில் 28.11.2004

இல.333, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

கணவர்,
பிள்ளைகள்.

### திருமதி வேதாரணியம் மகேஸ்வரி

திதி: துதியை 26.11.2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# பிரபாவின் நாளைய செய்தி திருப்புமுனையை ஏற்படுத்துமா?

விடுதலைப் புலிகளின் மறைந்த போராளிகளையும், போராட்டத்தில் சிக்கி உயிர்நீத்த பொதுமக்களையும் நினைவுகூரும் மாவீரர் தினம் நாளை.

இன்று தனது 53 ஆவது பிறந்த தினத்தைக் கடக்கும் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் நாளை, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தனது வருடாந்த உரையில் என்ன கூறப்போகின்றார் என்பதை, நாளைய மாவீரர் தினத்தைத் தமிழர் தாயகத்திலும் புலம் பெயர் நாடுகளிலும் அனுஷ்டிக்கும் ஈழத் தமிழர்கள் மட்டுமல்லாமல், முழு உலகத்தவருமே பார்த்திருக்கின்றனர்.

'பயங்கரவாத ஒழிப்பு' என்ற பெயரில் தமிழர் தேசத்தின் மீது பெரும் இராணுவப் படையெடுப்பையும் ஆக்கிரமிப்பையும் கட்டவிழ்த்து விட்டிருக்கும் சிங்கள தேசத்தின் போர்வெறிப் போக்குக் குறித்து, தமிழர் தாயகத்தின் தலைவரின் பிரதிபலிப்பு என்னவாக இருக்கும் என்று ஊகிப்பது அப்படி ஒன்றும் கஷ்டமானதல்ல.

இவ்விவகாரத்தில் தமிழர் தரப்பின் அதிருப்தியை, சீற்றத்தை, விசனத்தை என்ன வார்த்தைகளில் அவர் வெளிப்படுத்தப் போகின்றார், தமது எதிர்ப்பைக் காட்டுவதற்குத் தாம் தேர்ந்தெடுக்கப்போகும் பாதையின் போக்குக் குறித்து அவர் என்ன கோடிகாட்டப் போகின்றார் என்பதை அறிவதற்குத்தான் உலகம் காத்துக்கிடக்கின்றது.

செத்துச் சருகாகி, உக்கி உருக்குலைந்து போய்க்கிடக்கும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் குறித்தும் -

அதைக் கடைப்பிடிப்பதாகக் கூறிக்கொண்டே பெரும் யுத்த முஸ்தீபில் ஈடுபட்டுவரும் சிங்களத் தலைமை குறித்தும் -

இவ்வளவு தமிழர் விரோதக் கொடூரங்களும் அப்பட்டமாக அரங்கேற இன்னும் புளித்துப்போன பயகரவாத அடையாளப்படுத்தலைக் காட்டிக்கொண்டு, தமிழர் தேசத்தை ஒதுக்கி வைத்து, கொழும்பின் கொடூரங் களுக்கு இடமளித்துப் பார்த்துக் கொண்டிருக்கும் சர்வ தேசத்தின் அசிரத்தை தொடர்பாகவும் -

இவற்றுக்கு மத்தியிலும் தமிழர் போராட்டத்தின் பின்புலமாகத் திகழும் புலம்பெயர்வாழ் தமிழர்களின் விடுதலைப் போராட்டப் பற்றுணர்வு பற்றியும் -

தமிழர் தேசியத்தின் தலைவர் கூறப்போகும் செய்தி மிக முக்கியமானதாகவே இருக்கும்.

ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டப் பாதையைத் திரும்பிப் பார்ப்பவர்கள் அது ஆரம்பத்தில் உரிமை கோரி நடத்தப்பட்ட அஹிம்சை வழியிலான அறக் களமாகவும், பின்னர் வன்முறைப் புயல் வீசும் போராட்டத்தின் மறக்களமாகவும் இரு வழிகளில் பரிணாமம் கொள்வதைக் காண்பர்.

இந்த இரண்டுக்கும் நடுவே அவ்வப்போது வந்து போகும் சமாதான முயற்சி நாடகங்களையும் நாம் காணமுடியும். இந்த சமாதான அரங்குகள் அல்லது அமைதி முயற்சி எத்தனங்கள் எல்லாமே சிறுபான்மையினரான தமிழர்களைப் பெரும்பான்மையினரான பௌத்த - சிங்கள ஆட்சியாளர்கள் நம்ப வைத்து ஏமாற்றி மோசடி செய்த அங்கங்களாகவே விரியும்.

கடைசியாக 2002 முற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட அமைதி முயற்சிகூட 'உள்ளக சுயநிர்ணய உரிமையுடன்கூடிய சமஷ்டித் தீர்வு வரை' முன்னேறி, வாக்குறுதி அளிக்கப்பட்ட நிலையில், தென்னிலங்கைச் சிங்களத்தினால் இப்போது மீண்டும் புளித்துப் போன 'மாவட்டசபை மட்டத்துக்கு' ஏமாற்றி கீழிறக்கப்பட்ட வரலாற்றை நாம் கண்டு நிற்கின்றோம்.

இதற்குப் பின்னரும் சமாதான முயற்சிகள் என்ற பெயரில் அமைதி காத்து, ஏமாந்து கிடப்பதில் அர்த்தமேயில்லை என்பது தமிழர் தேசத்துக்குத் தெளிவுபட்டு விட்டது. இதை என்ன வடிவத்தில் நாளை பிரபாகரன் எடுத்துக் கூறுவார் என்பதையே உலகம் பார்த்திருக்கின்றது.

தமிழ் மக்கள் ஓரினமாக ஒருங்கிணைந்து வாழ்வதற்கும், ஓரினமாகத் தம்மை அடையாளப்படுத்தி நிற்பதுக்குமான அடிப்படைக் கட்டுமானங்களை - அவசியமான அடித்தளங்களை - மையமான அத்திபாரத்தை - இலக்கு வைத்துத் தாக்கும் சிங்கள அரசியல் ஒடுக்குமுறையானது மறுபுறத்தில் 'பயங்கரவாதிகளிடமிருந்து தமிழர்களை விடுவித்தல்' என்ற பெயரில் தமிழர் தாயகத்தைக் கைப்பற்றி, மீள்குடியேற்றம் என்ற பெயரில் அவற்றைச் சிங்கள மயப்படுத்தும் கபட சதித் திட்டமாக கனகச்சிதமாக முன்னெடுக்கின்றது. இதன்மூலம் தமிழர் தாயகத்தின் தனித்துவத்தை சிதைத்து, சின்னாபின்னமாக்கி, அந்தத் தேசத்துக்கும், தேசியதிற்கும் உரிய விடுதலை வேணவாவை நசுக்கிவிடலாம் எனக் கொழும்பு எண்ணுகிறது

இந்தச் சதித்திட்டங்களை - கபட வலைப்பின்னலை - வெற்றிகொள்வதற்கான தனது வியூகத்தைப் பிரபாகரன் தமது நாளைய மாவீரர் தின உரையில் கோடி காட்டுவார் என எதிர்பார்க்கலாம்.

கிழக்கு மாகாணத்தில் தமது நிர்வாகக் கட்டுப்பாடுகளை இழந்து, வன்னிக்குள் முடக்கப்பட்ட நிலையில், பிரபாகரன் விடுக்கப்போகும் செய்தி, இலங்கை அரசியலிலும், தமிழர் வாழ்வின் விமோசனத்திலும் புதிய அத்தியாயத்தை ஏற்படுத்துமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# வன்னிப் பிரதேசம் எங்கணும் பரவலாக மாவீரர் எழுச்சி நாள் உணர்வுபூர்வ ஆரம்பம்

கிளிநொச்சி, நவ. 26

மாவீரர்களை ஒன்று சேரப் போற்றும் மாவீரர் நாள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமையாகும். அதற்கு முன்னோடியாக எழுர்ச்சிநாள் நிகழ்வுகள் நேற்று வன்னிப் பிரதேசத்தில் பரவலாக நடைபெற்றனபு; ஆரம்பமாகின .

வன்னிப்பகுதி எங்கும் சிவப்பு மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டு எழுச்சிக் கோலம் பூண்டுள்ளது. மாவீரர்களின் திருவுருவப் படங்கள் கொண்டபந்தல்கள் எல்லா இடங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. எழுச்சிநாள் நிகழ்வுகள், அரசியல்துறை நடுவப் பணியகத்தில் நேற்றுக் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகின.

பொதுச்சுடர் ஏற்றப்பட்டு தமிழீழத் தேசியக் கொடி ஏற்றப்பட்டு மாவீரர்களின்திருவுருவப்படங்களுக்கு ஈகச்சுடர் ஏற்றி, மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.

முதல் மாவீரன் லெப். சங்கரின் திருவுருவப்படத்துக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ஈகச்சுடரேற்றி மாலை சூட்டினார். முதல் பெண் மாவீரர் 2ஆம் லெப். மாலதியின் திருவுருவப் படத்துக்கு தமிழீழ பெண்கள் மேம்பாட்டுப் பொறுப்பாளர் சு.தமிழினி ஈகச்சுடரேற்றி மாலை சூட்டினார். தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் திருவுருவப்படத்துக்கு விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன், முதல் தாக்குதல் தளபதி லெப்.சீலன் திருவுருவப் படத்துக்கு தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன்- கேணல் கிட்டுவின் திருவுருவப் படத்துக்கு பூநகரி கட்டளைப் பணியகத்துணைத் தளபதி வேந்தன் ஆகியோர் ஈகச்சுடரேற்றி மாலைகளை சூட்டினர். இதைத் தொடர்ந்து மலர்வணக்கம் நடைபெற்றது.

***மாவீரர் நினைவு மண்டபத்தில்***

கிளிநொச்சி நகரத்தில் 2 ஆம் லேப். மாலதி படையணியிலிருந்து வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கான நினைவு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச் சுடரினை மாலதி படையணியைச் சேர்ந்த ஆனந்தி ஏற்றினார்.

தமிழீழ தேசியக் கொடியினை போர்ப் பயிற்சி மகளிர் பொறுப்பாளர் அஜந்தி ஏற்றினார். மாலதி படையணிக் கொடியினை போராளி பிரணவா ஏற்றினார். மாவீரர்களுக்கு ஈகச்சுடரேற்றி மலர்மாலை சூட்டப் பட்டது.

கிளிநொச்சி கோட்ட அரசியல்துறைச் செயலகம், நீதி நிர்வாகத்துறை நடுவப் பணியகம், வட்டக்கச்சி கோட்ட அரசியல்துறைச் செயலகம், இராமநாதபுரம் வட்டம், முழங்காவில் கோட்டம், மல்லாவி, நெடுங்கேணி, ஒட்டிசுட்டான், கற்சிலை மடு, மற்றும்-

மன்னார், இலுப்பைக்கடவை, இரணை மடு ஆகிய இடங்களிலும் எழுச்சி நாள் நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக நடைபெற்றன. (அ)

# டேர்பன் மாவீரர் தின நிகழ்வில் நெடுமாறன் பிரதம பேச்சாளர்

கொழும்பு, நவ. 26

தென்னாபிரிக்காவின் டேர்பன், ஜோகன்னஸ்பேர்க் நகரங்களில் இருக்கும் தமிழ் அமைப்புகள் மற்றும் தென்னாபிரிக்கத் தமிழர்களின் சம்மேளனம் ஆகியன இணைந்து இவ்வாரம் டேர்பனில் நடத்தும் மாவீரர் தின நிகழ்வில் தமிழர் தேசிய இயக்கத்தின் ஸ்தாபகர் பழ. நெடுமாறன் பிரதம பேச்சாளராகக் கலந்து கொள்கிறார்.

ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்துக்கு தென்னாபிரிக்கத்தமிழர்கள்முழு ஆதரவு வழங்குகின்றனர் என்றும் -

ஈழத்தில் மரணித்த மாவீரர்களுக்கு, தென்னாபிரிக்கத் தமிழர்கள் வீர வணக்கம் செலுத்துகின்றனர் என்றும் -

மேற்படி தென்னாபிரிக்கத் தமிழ் அமைப்புகள் தெரிவித்திருக்கின்றன. (சி)

# தேசிய அரசு கோருகிறார் அமைச்சர் டி.எம். ஜயரத்ன

கொழும்பு, நவ. 26

நாடு இன்று எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சகல அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்த தேசிய அரசு ஒன்றை அமைப்பதே வழியாகும் என்று தற்போதைய அரசின் சிரேஷ்ட அமைச்சர்களுள் ஒருவரான டி.எம். ஜயரத்ன தெரிவித்திருக்கின்றார்.

தனியார் வானொலி ஒன்றுக்குக் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு கூறியிருக்கின்றார்.

''நாடு இன்று எதிர்கொள்ளும் தேசிய இனப்பிரச்சினை மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளை இந்த அரசினால் தனித் துத் தீர்க்க முடியாது.

''அதற்கு எமக்கு பலமான அரசு தேவை. ஆனால் தற்போதைய தேர்தல் முறைமைகளின் கீழ் பலமான அரசு ஒன்று தெரிவு செய்யப்படுவதற்கு வாய்ப்புகள் இல்லை.

எனவே நாங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து தேசிய அரசு ஒன்றை அமைத்து, நாடு இப்போதுஎதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க முயலவேண்டும்.'' - என்றார் அமைச்சர் ஜயரத்ன.

ஆனால் ஆளும் தரப்பில் தேசிய அரசு அமைக்கக் காட்டப்படும் சைகைகளை பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. நிராகரித்து வருகின்றது. தற்போதைய அரசைக் கவிழ்த்து, தேர்தல் ஒன்றைச் சந்திப்பதே அதன் நோக்கம் என்பதை அக்கட்சி வெளிப்படுத்தி வருகின்றது. (சி)

# கம்பாலாவில் தலைவர்கள் பலரை சந்தித்தார் ஜனாதிபதி ராஜபக்ஷ

## அதன் பின் ஈரானுக்குப் புறப்பாடு

கொழும்பு, நவ. 26

பொதுநலவாயநாடுகள்அமைப்பின்மாநாட்டில் பங்குபற்றுவதற்காக உகண்டாவின் தலைநகர் கம்பாலா சென்றிருந்த இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கு பல்வேறு நாடு களின் தலைவர்களையும் தனித்தனி யாகச் சந்தித்து உரையாடியிருக்கின்றார்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கையும் மற்றும் மலேசியா, சிங்கப்பூர், நியூஸிலாந்து ஆகிய நாடுகளின் பிரதமர்களையும் இலங்கை ஜனாதிபதி தனித்தனியாகச் சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடினார் என கம்பாலாத் தகவல்கள் தெரிவித்தன.

இந்த மாநாட்டை முடித்துக் கொண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது குழுவினரும் ஈரானுக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

ஈரான் குறித்து அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகள் கடும் அதிருப்திப் போக்கை வெளிப்படுத்திவரும் சர்வ தேச அரசியல் சூழ்நிலையில் இலங்கை ஜனாதிபதி தமது சர்ச்சைக்குரிய ஈரானிய விஜயத்தை ஆரம்பித்திருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈரானிடமிருந்து ஆயுத மற்றும் குறைந்த விலையில் எரிபொருள் உதவிகளைப் பெற்றுக்கொள்வது இலங்கை ஜனாதிபதியின் இந்த விஜயத்தின் நோக்கம் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். (சி)

# மன்னாரில் நேற்று மோதல்

கொழும்பு,நவ.26

மன்னார், அடம்பன் மற்றும் உயிலங்குளம் பகுதிகளில் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நேற்றுக்காலை மோதல்கள் இடம் பெற்றன என்று கொழும்பில் தேசிய பாதுகாப்பிற்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்திருக்கின்றது.

அடம்பனில் விடுதலைப் புலிகளே வலிந்து தாக்குதலைத் தொடுத்தனர் என்றும், அதற்கு இராணுவத்தினர் பதில் தாக்குதல் மேற்கொண்டனர் என்றும், இதன்போது இராணுவத்தினருக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை என்றும் ஊடக மத்திய நிலையம் குறிப்பிட்டது. (சி)

# ஆஸி. பொதுத்தேர்தலில் எதிர்க்கட்சி பெருவெற்றி!

## புதிய பிரதமராகிறார் கெவின் ருத்



சிட்னி, நவ.26

ஆஸ்திரேலியப் பொதுத் தேர்தலில் எதிர்க் கட்சி யான தொழிற் கட்சி பெரு வெற்றியீட்டியுள் எது. அந்தக் கட்சி சார் பாக பிரதமர் பதவிக்குப் போட்டி யிட்ட கெவின் ருத் ஆஸ்தி ரேலியா வின் புதிய பிரதமராக அடுத்துவரும் நாட்களில் பதவி யேற்கிறார்.

பதினொரு ஆண்டு காலமாக பிரதமராகப் பதவி வகித்து வந்தஜோன்ஹோவாட் தனது தோல்வியை ஒப்புக் கொண்டு பதவி விலகுகின் றார்.

அமெரிக்காவுக்கு நெருக்கமான - புஷ்ஷின் விசுவாசியாக விளங்கி வந்த ஹோவாட்டின் தோல்வி, ஈராக் விடயத்தில் ஆஸ்திரேலியாவின் புதிய நிலைப்பாட்டை எடுத் துக் காட்டுகின்றனஎன அரசியல் விமர்சகர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். இந்த முறை பொதுத் தேர்தல் ஈராக்கிற்கு ஆஸ்திரேலியத் துருப்புக்களை அனுப்புகின்றமையை அடிப்படையாக வைத்து நடைபெற்றமை சுட்டிக்காட்டத்தக்கது. தான் தேர்தலில் வெற்றிபெற்றால் ஈராக்கிலிருந்து ஆஸ்திமேயத் துருப்புக்கள் முழுமையாகத் திருப்பியழைக் கப்படுவர் என கெவின் ருத் பிரச்சாரங்களின்போது முழங்கி வந் தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கடந்த ஒரு மாதகாலமாக சூடுபிடித்திருந்த பொதுத் தேர்தலின் வாக்களிப்பு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

ஆஸி. நாடாளுமன்றம் 150 ஆசனங்களைக் கொ இவற்றில் 83 ஆசனங்களை கெவின் ருத் தலைமையிலான லேபர் கட்சி கைப்பற்றிக்கொண்டது. கொன்சர்வேட்டிவ் கட்சிக்கு 48 ஆசனங்களே கிடைத்திருந்தன. கடந்த முறை நடைபெற்ற தேர்தலில் கொன்சர்வேட்டிவ் கட்சி 74 ஆசனங்களையும் லேபர் கட்சி 60 ஆசனங்களையும் சுவீகரித்திருந்தன. (சி)

## நாளை

| | |
|---|---|
| கார்த்திகை - 11 | செவ்வாய்க்கிழமை 27.11.2007 |
| திதி :திருதியை | பி.ப. 02.50 |
| நட்சத்திரம் : | திருவாதிரை முன்னிரவு 08.51 |
| சுபநேரம் | : 10.42 - 12.12 |
| ராகுகாலம் | : 03.12 - 04.42 |
| சங்கடஹர சதுர்த்தி | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியர்கள் - பொலிஸ் மலேசியாவில் மோதல்

கோலாலம்பூர், நவ.26

மலேஷியாவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இந்தியர்கள் மீது பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியும், தண்ணீர் பீச்சியடித்தும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

மலேஷிய அரசால் இந்தியர்கள் பாரபட்சத்துடன் நடத்தப்படுகின்றனர் எனக் குற்றஞ்சாட்டி கோலாலம்பூரில் உள்ள பெட்ரோனாஸ் இரட்டைக் கோபுரம் முன்பாக சுமார் 5 ஆயிரம் மலேஷிய இந்திய இந்துக்கள் நேற்றுக் காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டதால் இந்தியர்கள் தடையை மீறி அதில் பங்கேற்றனர். இதையடுத்து, மலேஷியப் பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியும், பீரங்கிகளைக் கொண்டு தண்ணீர் பீய்ச்சியடித்தும் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் ஏராளமான இந்தியர்கள் படுகாயமடைந்ததார்கள் என்றும், பலர் கைது செய்யப்பட்டார்கள் என்றும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

மலேசிய மக்கள்தொகை 2.8 கோடி, இதில் எட்டுச் சதவீதம் பேர் இந்தியாவின் தமிழகத்திலிருந்து குடியேறியவர்கள். இதில் தமிழகத்தை சேர்ந்த இந்துக்களும் அடங்குவர். இவர்கள், கடந்த 150 ஆண்டுகளுக்கு முன் கூலி மற்றும் தங்குமிடம் தருவதாகக் கூறி ஒப்பந்தப்படி பிரிட்டிஷ் அரசால் மலேசியாவுக்கு அழைத்து வரப்பட்டவர்களின் சந்ததியினர்.

# பொதுத்தேர்தலைப் புறக்கணிக்கும் முடிவிலிருந்து பெனாஸிர் 'பல்டி'

இஸ்லாமாபாத், நவ.26

பாகிஸ்தான் பொதுத் தேர்தலைப் புறக்கணிக்கும் முடிவை பெனாஸிர் பூட்டோ கைவிட்டுள்ளார். வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கு தனது கட்சியினருக்கு அவர் பச்சைக்கொடி காட்டியுள்ளார்.

இதேவேளை, பாகிஸ்தானில் நெருக்கடி நிலை தற்போது அமுலில் உள்ளது. இதற்கு உயர் நீதிமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது. நாடாளுமன்றம் மற்றும் மாகாண சபைகளுக்கு ஜனவரி 8ஆம் திகதி தேர்தல் நடைபெறும் என்றும் அதுவரை நெருக்கடி நிலை நீடிக்கும் என்றும் ஜனாதிபதி முஷாரப் அறிவித்துள்ளார்.

ஆனால், இந்தத் தேர்தலில் போட்டியிடும் எண்ணத்தில் பாகிஸ்தான் திரும்பிய பெனாஸிர் திடீரென தேர்தலைப் புறக்கணிக்கும் எண்ணத்தில் இருந்தார். இதற்காக மற்றைய எதிர்க்கட்சிகளின் ஆதரவைத் திரட்டினார். ஆனால், மற்றைய எதிர்க்கட்சிகள் தேர்தலைப் புறக்கணிப்பதற்கு உடன்படவில்லை. சவூதி அரேபியாவிலிருந்து திரும் பவுள்ள பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் கூட தேர்தலில் போட்டியிடத் திட்டமிட்டுள்ளார். இதனால், பெனாஸிரின் முயற்சி தோல்வியடைந்தது.

## ராஜபாதையில் இளைஞர் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், நவ. 26

கோப்பாய் ராஜபாதையில் நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஆடியபாதம் வீதியைச் சேர்ந்த கேசவன் ஜெயக்குமார் (வயது 25) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

கோப்பாய் கிராம சேவையாளரால் சடலம் நேற்று மாலை யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ-1-78)

## சென்னை மற்றும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நகர்கள் சிலவற்றிலிருக்கும் நீதிமன்றங்களில் ஒரே சமயத்தில் வெடிகுண்டுகள் வெடித்த பரபரப்பு அடங்குவதற்குள் இந்த மிரட்டல் விடுக்கப்பட்டிருப்பதாகச் சென்னைப் பொலிஸார் தகவல் தெரிவித்தனர்.

உத்தரப்பிரதேச மாநிலத்தின் லக்னோ, வாரணாசி, பைசாத் ஆகிய நகரங்களிலுள்ள நீதிமன்றங்களில் கடந்த வெள்ளிக்கிழமை ஒரே சமயத்தில் குண்டுகள் வெடித்தன. இதில் சிக்கி சட்டத்தரணிகள் உட்பட 17 சிவிலியன்கள் பலியாகினர். மாநிலத்தில் முன்னர் கைதான தீவிரவாதிகளை சட்டத்தரணிகள் தாக்கினர் என்பதாலும், பயங்கரவாதிகளுக்காக சட்டத்தரணிகள் வாதாட மறுப்பதாலும் அவர்களைக் குறிவைத்து இந்தக் குண்டுவெடிப்புகள் நடத்தப்பட்டன எனப் பொலிஸாரின் தகவலில் தெரியவந்துள்ளது.

வாரணாசியில் முதல் குண்டு வெடித்த உடனே அந்தக் குண்டுவெடிப்புகள் பற்றி தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு மின்னஞ்சல் மூலம் மிரட்டல் கிடைத்தது. அது பற்றிப் பொலிஸார் விசாரித்து வருகின்றனர். இந்த நிலையில் டில்லியில் உள்ள 'இண்டியா ரி.வி.' என்ற தொலைக்காட்சி நிறுவனத்துக்கு நேற்றுமுன்தினம் மற்றொரு மின்னஞ்சல் வந்தது. guru_boys2000@yahoo.com என்ற இணையத்தளத்தில் இருந்து அனுப்பப்பட்டள்ள அந்தத் தகவலில், சென்னை, காசியாபாத், டில்லி, மும்பை, கொல்கத்தா, இஸ்லாமாபாத் (பாகிஸ்தான்) ஆகிய நகரங்களில் தொடர் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்படும் என்று மிரட்டல் விடப்பட்டுள்ளது. இந்தியா வந்துள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் அணி மீதும் தாக்குதல் நடத்தப்படும் என்று மிரட்டப்பட்டுள்ளது. இது குறித்து டில்லிப் பொலிஸார் தீவிர விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

மேலும், சென்னை உட்பட தமிழகம்எங்கும் பாதுகாப்பு பன்மடங்கு பலப்படுத்தப்பட்டிருக்கின்றது.

## மாவீரர் தினத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்னிப் பிரதேசத்தில் அரசுப் படைகளுக்கும் புலிகளுக்கும் இடையில் உள்ள முன்னணிக் காவலரண் பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் முழு அளவில் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதால் அங்கும் பதற்ற நிலை உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மாவீரர் தினத்தை முன்னிட்டு எழுச்சி நாள் நிகழ்வுகள் ஆரம்பமாகிய நேற்று, வன்னியில் விமானக் குண்டுவீச்சும், கிளைமோர்த் தாக்குதலும் நடத்தப்பட்டிருக்கின்றன. இவை விடுதலைப் புலிகளுக்கு ஆத்திரமூட்டும் தாக்குதல்களாக கருதப்படுவதாக பாதுகாப்புத்துறை நோக்கர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். இது விடுதலைப் புலிகளை அதிரடித் தாக்குதலுக்குத் தூண்டும். அதனால், நாளை தொடக்கம் பாதுகாப்புத் தரப்பினரை மேலும் உஷார் நிலைக்குத் தள்ளியிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

பாதுகாப்புப் படையினர் தொடர்ச்சியான தயார் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (அ-சி)

## நாடு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விமானத்தில் பி.பி.ஸி. செய்தியாளர்களிடம் பேசிய நவாஸ் ஷெரீப், தன்னுடைய இலட்சியம் பாகிஸ்தானில் இராணுவ ஆட்சியை முறியடிப்பதுதான் என்பதால், பாகிஸ்தான் அதிபர் முஷாரப்புடன் ஒத்துப் போவது என்ற பேச்சுக்கே இடமில்லை - என்றார்.

செப்டெம்பரில் இடம்பெற்றதுபோல் உடனடியாக நவாஸ் ஷெரீப்பை நாட்டை விட்டு வெளியேற்றும்திட்டம் பாகிஸ்தண் அரசிடம் இருப்பது போலத் தெரியவில்லை எனக் கூறப்படுகிறது.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது கல்வி நிறுவனத்தில் பல வருடங்கள் கணித ஆசானாக கற்பித்து திருகோணமலை கணக்காய்வு திணைக் களத்தில் கணக்காய் வாளராக பணிபுரிந்து வரும் ஆசிரியர்

**சிவகடாட்சம் சிவச்செந்தூரன்**

கடந்த 23.11.2007 அன்று பண்டார நாயக்க ஞாப கார்த்த மாநாட்டு மண்டபத்தில் (BMICH) HNDA பட்டம் பெற்றமையிட்டு அவரை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மேலும் பல பட்டங்களைப் பெற்று இன்புற்று வாழவேண்டுமென இறைவனை வேண்டுகின்றோம்.

யாழ் கல்வி நிலையம்,
ஆறுகால்மடம்.

அதிபர், ஆசிரியர்,
மாணவர்கள்.

THE SCIENCE CORNER
Clock Tower Lane, Jaffna
புலங்கள்
Physics
ஆரம்பம் :26.11.2007
திங்கள் புதன் வெள்ளி 4:30p.m to 6:00p.m


## கிளிநொச்சியில் கிபிர் குண்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சி, தர்மபுரம், 8ஆம் யுனிட்டில் இந்தக் கோரத் தாக்குதலை 'கிபிர்' விமானங்கள் நடத்தின.

காயமடைந்தோரில் ஓர் ஆசிரியையும் ஓய்வுபெற்ற தபாலதிபர் ஒருவரும் அடங்குவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

காயமுற்றோர் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கின்றார்கள்.

எம்.சுபாஜினி என்ற பருவப்பெண்ணும் கொல்லப்பட்டார்.

வர்ணலிங்கம் (வயது 54), அவரது மனைவி சரஸ்வதி (வயது 49), அவர்களின் மகள் வ.சுமத்திரா (வயது 25) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர். இவர்கள் யாழ். மாவட்டம் ஏழாலையிலிருந்து இடம் பெயர்ந்து கிளிநொச்சியில் வசித்துவந்தவர்கள் எனக் கூறப்படுகின்றது.

வர்ணலிங்கம் - சரஸ்வதி தம்பதியரின் மகனான கமல்ராஜ் (வயது 28) வயிற்றிலும் நெஞ்சிலும் படுகாயமடைந்திருக்கின்றார். அவரின் மனைவி கே.தனயோகம் (வயது 19) ஒரு காலை இழந்துவிட்டார்.

தர்மபுரம் மகாவித்தியாலய நடன ஆசிரியையான எம்.நடனவதி (தேவி - வயது 41) வயிற்றில் காயங்களுடனும், ஓய்வுபெற்ற தபால் அதிபர் அரியகுட்டி வேல்முருகு (வயது 60) காலில் படுகாயங்களுடனும், லிங்கேஸ்வரன் (வயது 60) தலையில் காயத்துடனும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

இத்தாக்குதலில் படுகாயமடைந்த ரி. அனுஷா என்ற நான்கு வயதுப் பெண் குழந்தையும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளது.

நேற்றைய இந்தக் கொடூரத் தாக்குதலின்போது மொத்தம் எட்டுக் குண்டுகள் வீசப்பட்டன என்று கூறப்படுகின்றது. இத்தாக்குதலில் இரு வீடுகள் முற்றாக நாசமாகின. மற்றும் ஏழு வீடுகள் சேதமடைந்தன.

தமிழர் தாயகப் பிரதேசம் மாவீரர் வாரத்தை அனுஷ்டித்துவரும் இவ்வேளையில் இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது.

புலிகளின் செய்மதித் தொடர்பாடல் மையத்தை இலக்குவைத்தே இந்த விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டதாக விமானப்படைப் பேச்சாளர் தெரிவித்தார். (சி)

## புலிகளை அரசு தடை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரவு - செலவுத் திட்டத்தை எதிர்க்கும் தமது தீர்மானத்தில் மாற்றமில்லை என்பதை பல்வேறு ஊடகங்களுக்கும் தாம் அளித்து வரும் பேட்டிகள் மூலம் ஜே.வி.பி. தலைவர்கள் தெளிவுபடுத்தி வருகின்றனர்.

இதேசமயம் -

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தை இலங்கையில் தடை செய்வதற்கு அமைச்சரவை தீர்மானம் எடுத்தமைபோல் புலிகளையும் தடைசெய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஜே.வி.பி. மீண்டும் அரசுக்கு வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

ஆனால், அவ்வாறு புலிகளைத் தடை செய்ய அரசு முடிவெடுத்தாலும் கூட அடுத்த மாதம் 14ஆம் திகதி நாடாளுமன்றில் இடம்பெறவுள்ள, வரவு - செலவுத் திட்டத்தின் மீதான இறுதி வாக்கெடுப்பின்போது வரவு - செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களிக்கப்போவதில்லை என்றும் அக்கட்சி தெரிவிக்கின்றது.

புலிகளை அரசு தடைசெய்தாலும் கூட, இந்தத் திட்டத்தில் மக்களுக்குப் பாதகமாக உள்ள விடயங்கள் மாறப்போவதில்லை என்றும் -

ஒட்டுமொத்த மக்களின் நலன்கருதி இந்த வரவு - செலவுத் திட்டத்தை எதிர்ப்பதென்ற தமது தீர்மானத்தில் எந்த விதமான மாற்றமும் செய்யப்போவதில்லை என்றும் - ஜே.வி.பி. நேற்றுத் தெரிவித்தது.

இதுதொடர்பாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் -

''புலிகளுக்குப் பல வழிகளிலும் நிதி உதவி வழங்கி வந்த தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தடைசெய்யப்பட வேண்டும் என்பது எமது நீண்டகாலக் கோரிக்கை.

''இப்போது அமைச்சரவை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைத் தடைசெய்வதென்று தீர்மானித்திருக்கின்றது. இத் தீர்மானத்தை நாம் வரவேற்கின்றோம்.

'' அதை விடவும் மிக முக்கியமான விடயம் புலிகளைத் தடைசெய்ய வேண்டும் என்பதுதான். புலிகளைத் தடைசெய்யுமாறு நாம் அரசிற்கு வேண்டுகோள் விடுத்து வருகிறோம்.

''ஆனாலும், புலிகளை அரசு தடை செய்தால் அதைக் காட்டி வரவு - செலவுத் திட்டத்திற்கு எமது ஆதரவைப் பெற்று விட முடியாது.

''புலிகளைத் தடைசெய்தாலும் வரவு - செலவுத் திட்டத்தில் மக்களுக்கு நன்மையற்றிருக்கும் விடயங்கள் மாறிவிடா. நாம் மக்களின் நலன்கருதியே இந்த வரவு - செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிக்கத் தீர்மானித்தோம். அந்தத் தீர்மானத்தில் எந்த மாற்றமும் ஏற்படப்போவதில்லை.

''வரவு - செலவுத் திட்டத்திற்கு ஜே.வி.பியின் ஆதரவைப் பெறவே தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைத் தடைசெய்ய அரசு தீர்மானித்தது என்று பரவலாகப் பேசப்படுகின்றது. அதுதான் அரசின் நோக்கமாக இருந்தால் அரசின் அத்தகைய விருப்பம் ஈடேறாது.'' - என்றார். (சி)

## முழங்காவில்,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருமான சதானந்தராசா கிரிதரன் மற்றும் கற்சிலைமடு, கெருடமடுவைச் சேர்ந்த பெரியசாமி விஜிதரன் ஆகியோரே உயிரிழந்தனர் என்று கூறப்படுகின்றது.

இதேசமயம், மன்னார் மாவட்டம் முழங்காவில் பகுதியில் இடம்பெற்ற மற்றொரு ஊடுருவும் அணியின் கிளைமோர்த் தாக்குதலில் முழங்காவில் வைத்தியசாலையின் அம்புலன்ஸ் சிக்கி சேதமடைந்தது.

நேற்று முற்பகல் இந்த அம்புலன் நோயாளர்களை ஏற்றிக்கொண்டு சென்று அக்கராயன், முட்கொம்பனில் இறக்கிவிட்டு முழங்காவில் வைத்திசாலை நோக்கித் திரும்பிச் சென்றுகொண்டிருந்தது என்றும் -

அப்போதே அம்புலன்ஸ் மீது தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் - வன்னித் தகவல்கள் தெரிவித்தன.

இதில் அம்புலன்ஸ் சாரதி தவசீலன் (வயது-25) என்பவர் படுகாயமடைந்தார். அவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார்.

தாக்குதல் சம்பவத்தை அடுத்த விடுதலைப் புலிகள் அப்பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர் என்றும் கூறப்பட்டது. (சி)

## ஒரு மணிநேர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டது. ஆனால், 3.5 மெகாவாட் மின்சாரத்தை மட்டுமே உற்பத்திசெய்யமுடியும் என்று அறியப்பட்டுள்ளது.

ஆகையால் தேவைக்குப் போதியளவு மின் உற்பத்தி செய்யும் நிலை ஏற்படும் வரை ஒருமணி நேரம் மின்வெட்டுத் தொடரும் -

பொதுமக்கள் மின்சாரப் பாவனையைக் குறைவாகப் பயன்படுத்தி ஒத்துழைப்பு நல்கவேண்டும். உச்சப் பயன்பாட்டு நேரமான இரவு 6 மணியிலிருந்து இரவு 10 மணிவரை மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்தவேண்டும். இல்லையேல் நிலைமை மேலும்பாதிப்புறலாம் - என்று விவரித்தார் அரச அதிபர். (அ-ப)

## மரண அறிவித்தல்

### அண்ணாமலை நாகம்மா

குப்பிளானைச் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அண்ணாமலை நாகம்மா நேற்று (25.11.2007) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாச்சலம் (அண்ணாமலை) யின் அன்பு மனைவியும் சிவபாக்கியம் (சுவிஸ்), பரமானந்தம் - நளாயினி (கனடா), அருளானந்தம்-கனகாம்பிகை, காலஞ்சென்ற மாகாலட்சுமி மற்றும் கிருஸ்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற வல்லிபுரம், விக்னேஸ்வரன் (கனடா) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26.11.2007) திங்கட்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காடாகடம்பை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குப்பிளான் தெற்கு,
குப்பிளான்.

தகவல்:-
அருளானந்தம்
குடும்பம்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.11.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org